(6 pages) **Reg. No. :** ......................................

**Code No. : 32078** **Sub. Code : JSTA 3 B/ SSTA 3 B**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2020.

Third Semester

தமிழ் — Main

Skilled Based Subject

பேச்சுக்கலை

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. திருக்குறளில் பேச்சு தொடர்பான அதிகாரம் எத்தனை சதவீதம் உள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

(அ) 10% (ஆ) 13%

(இ) 15% (ஈ) 18%

2. மேடைப் பேச்சு இன்று சொற்பொழிவு என்று மாறிய தமிழ்ச்சொல் எந்த மாவட்டத்தில் முதன்முதலில் பிறந்தது?

(அ) கன்னியாகுமரி (ஆ) விருதுநகர்

(இ) தூத்துக்குடி (ஈ) திருநெல்வேலி

3. பேச்சாளரிடம் இருக்கவேண்டிய அடிப்படைத் தகுதி எது?

(அ) தன்னம்பிக்கை (ஆ) பொது அறிவு

(இ) அச்சமின்மை (ஈ) மனப்பாடம் செய்தல்

4. மேடைப் பேச்சில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது

(அ) எழுத்து வளம் (ஆ) பேச்சுவளம்

(இ) குரல் வளம் (ஈ) தோற்றப் பொலிவு

5. சுவாமி விவேகானந்தர் எந்த நகரில் சமய மாநாட்டை நடத்தினார்?

(அ) சிகாகோ (ஆ) மும்பை

(இ) லண்டன் (ஈ) ஜெருசலேம்

6. "பர்மாவும் அரிசியும்" என்ற தலைப்பில் உரையாற்றியவர் யார்?

(அ) தெ.போ.மீ. (ஆ) அறிஞர் அண்ணா

(இ) காமராஜர் (ஈ) கி.ஆ.பெ. விசுவநாதம்

7. 'பொருளற்ற முறையில் சொற்களைப் பயன்படுத்துவது வேதனை தருவதாக உள்ளது' எனக் குறிப்பிட்டவர் யார்?

(அ) தி.அ. சொக்கலிங்கம் (ஆ) அண்ணா

(இ) திரு.வி.க. (ஈ) ரா.பி. சேதுப்பிள்ளை

8. பேசத் தொடங்குவதற்கு முன்னர் நகைச்சுவையாக சில கேள்விகள் கேட்டு அவையினரை கலகலக்க வைப்பவர் யார்?

(அ) த.கு. சுப்பிரமணியன்

(ஆ) மு.வ.

(இ) கிருபானந்த வாரியார்

(ஈ) சாலமன் பாப்பையா

9. இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்ற மாநாடு மதுரையில் எப்பொழுது நடைபெற்றது?

(அ) 2006 மே திங்கள்

(ஆ) 2009 மே திங்கள்

(இ) 2004 மே திங்கள்

(ஈ) 2002 மே திங்கள்

10. கையில் எவ்விதக் குறிப்பும் இல்லாமல் வேகமாகப் பேசுபவரை எவ்வாறு அழைக்கிறோம்?

(அ) சிறந்த பேச்சாளர்

(ஆ) பேச்சாற்றலின் சிகரம்

(இ) அனுபவப் பேச்சாளர்

(ஈ) பேசத் தெரியாதவர்

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) பேச்சினால் உலகம் இயங்குவதையும், பேச்சினால் விளைவும் நன்மைகளையம் குறிப்பிடவும்.

(அல்லது)

(ஆ) மேடைப் பேச்சுக்கு 'சொற்பொழிவு' என்ற பெயர் தோன்றிய விதம் பற்றிக் கூறுக.

12. (அ) பன்முறை பேசி பயிற்சி பெறும் முறையை பெர்னாட்ஷா எவ்வாறு குறிப்பிடுகிறார்?

(அல்லது)

(ஆ) குரலினைப் பாதுகாக்கும் வழிமுறைகள் சிலவற்றைக் கூறு.

13. (அ) அவையினரை விளித்துப் பேசுவதிலுள்ள மூன்று வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பேசுபவர் கதை கூறி தொடங்குவதிலுள்ள சிறப்பினை எழுது.

14. (அ) சிறந்த சொற்பொழிவாளர் கருத்துத் தொடர்புடன் பேச வேண்டும் என்பதை உதாரணம் காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) தென்கச்சி சுவாமிநாதன் கூறிய கதை மக்களின் பண்பு வளர்ச்சிக்கு உதவக்கூடியன என்பதை வெளிப்படுத்துக.

15. (அ) வேண்டுகோளினை முன்வைத்து பேச்சை முடித்தல் என்பதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) சூளுரை செய்து பேச்சை முடித்தலைக் கூறுக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) அறிவுத் திறனற்ற பேச்சு என்பதை சிலப்பதிகாரம் வழி கூறுக.

(அல்லது)

(ஆ) அரசியல் சொற்பொழிவு குறித்து கட்டுரை வரைக.

17. (அ) உச்சரிப்பை மேடைப் பேச்சாளர் கவனமுடன் மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) 'பேச்சாளர்களுக்கு இலக்கியப் பயிற்சி அவசியம் தேவை' — கூற்றை ஆய்க.

18. (அ) பேச்சாளர் நேரடியாகத் தொடங்குவதையும், வினாக்களின் வழித் தொடங்குவதையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) பேச்சின் தொடக்கம் அமையும் விதம் குறித்து நூலாசிரியர்கள் கூறிய கருத்தினை விளக்குக.

19. (அ) ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் பேச்சாற்றலை திருநெல்வேலி மாநாட்டு நிகழ்வு மூலம் காட்டுக.

(அல்லது)

(ஆ) பேச்சாளர் சிறந்த மொழி நடைக்கூறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை சான்றுடன் கூறுக.

20. (அ) 'பேச்சை முடித்தல்' பற்றிய விரிவான கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பேச்சாளர்கள் பேசுவதற்கு தரவுகளைச் சேகரிக்கும் முறையினைக் கூறுக.

---